# ஆழியைக் கடந்த நவரத்தினசாமி



**வெற்றி ஈட்டி விட்டான் தமிழன்**
**விருது நாட்டி விட்டான்**
**முற்றும் கேட்டிராத புகழின்**
**முடிவி லேறி விட்டான் அன்பாய்**
**பெற்ற தாயின் புகழை எங்கும்**
**பேச வைத்து விட்டான் ஈழம்**
**நற்ற வத்தினாலே ஈன்ற எங்கள்**
**நவ ரத்தின சாமி வாழ்க.'**

கவிஞர் பரமஉறம்ச தாசனின் உணர்ச்சி மிக்க இந்தக் கவிதை வரிகளும், 'தமிழ் வீரன் நவரத்தினசாமி நீந்திக் கடந்தார்' என்ற தலைப்பைத் தாங்கி, 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம திகதி தினகரன் நாளிதளின் செய்தியும் தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரையும் ஒரு கணம் தலை நிமிரச் செய்திருக்கும். இலங்கையையும், இந்தியாவையும் பிரித்துக் கொண்டிருக்கும், பாக்கு நீரிணையை மிதந்தும்,நீந்தியும் கடந்து சாதனை படைத்த தமிழ் வீரன் நவரத்தினசாமி பிறந்த நாட்டிற்கும், தாய்மொழிக்கும் பெருமை தேடித்தந்த பெருமகனல்லவா?

1909 அம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 16 ஆம் திகதி தொண்டைமானாறு என்னும் வரலாற்றுப் பெருமை கொண்ட தலத்திலே பிறந்த நவரத்தினசாமி தனது அரம்பக் கல்வியை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், - தற்போதைய தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் - உயர் தரக் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் மேற்கொண்டார். இதுவரை எவராலும் நீந்திக் கடக்கமுடியாது எனக் கைவிடப்பட்டிருந்த ஆங்கிலக் கால்வாயை வெள்ளைக்கார நீச்சல் வீரன் ஒருவன் நீந்திக் கடந்து சாதனை படைத்தான் என்ற வீரவரலாற்றினைத் தனது வகுப்பு ஆசிரியர் மூலமாக படிக்கும் காலத்திலேயே கேட்டறிந்த மாணவன் நவரத்தினசாமிக்கு நீச்சலில் தானும் ஒரு நாள் சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆவலும், வேகமும் அதிகரித்தது.

எனது பிறந்த ஊருடன் சேர்ந்திருக்கும் பாக்கு நீரிணையை என்றாவது ஒரு நாள் நானும் நீந்திக் கடந்து சாதனையை நிலை நாட்டுவேன்' என்று தனது வகுப்பு நண்பர்களிடம் கூறியபொழுது, 'இது உன்னால் முடியக்கூடிய காரியமா? முட்டாள் தனமாக நடக்க முடியாத ஒன்றின் மீது ஆசை வைக்காதே....பேசாமல் படிச்சு மேலுக்கு வாற வழியைப்பார் என்று கூறி ஏளனம் செய்த மாணவர்களைப் பார்த்து, இந்கச் சாதனையை எப்படியும் நிலைநாட்டுவேன்' என்ற சபதத்துடன், இன்றில் இருந்தே தனது நீந்தும் பயிற்சியை ஆரம்பித்தார். புயிறசியை ஆரம்பித்ததில் இருந்து அவரது இலட்சிய வேட்கை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

அவரது பத்தொன்பதாவது வயதில், கல்லூரிப் படிப்பை நிறைவு செய்ததும், உடனடியாகவே அரச உத்தியோகமும் கிடைத்தது.அந்தக்காலத்தில் எல்லாம் ஒருவர் ஓரளவு படித்தவுடன் ஏதாவது ஒரு அரச உத்தியோகம் கிடைக்கும் என் நம்பிக்கை இருந்ததால்,கல்வி கற்கவேண்டும் என்ற விருப்பமும், ஆவலும் இருந்கது.விவசாயத் திணைக்களத்தில் விவசாய விஸ்தரிப்பு உத்தியோக்கராகக் கடமையை ஏற்றுக் கொண்டு; அந்தத் துறையிலும் தனது அர்ப்பணிப்புடனான சேவையை ஆற்றிவந்தார்.

விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது அவர் பெற்ற களஅனுபவங்களும், ஆய்வு ஊக்கமும் புதிய படைப்பாற்றல ஒன்றுக்கான எண்ணக் கருவை வளர்த்து வந்தது. ஆதன் விளைவாக, பயிர்ச் செய்கையில் வேலையை இலகுவாக்கும் விவசாய உபகரணங்களையும்,கருவிகளையும் கண்டு பிடித்து மக்களின் பாவனைக்குக் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்து அதில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். அவரது அயராத முயற்சியினால், விதை தூவும் இயந்திரத்தைக் கண்டு பிடித்து அரசின் பாராட்டுக்கனையும் பெற்றுக் கொண்டதுடன்,அதன் உரிமத்தையும் பெற்றுக் கொண்டார்.விவசாயத்துறையில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும், அறிவார்ந்த ஆற்றலையும் இனங்கண்ட விவசாயத் திணைக்கள பணிப்பரளரால்,விவசாயப் பகுதி போதனாசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டார். விவசாயத் திணைக்களத்தில், போதனாசிரியராகச் சிறப்புடன் பணியாற்றி வந்த நவரத்தினசாமியின் ஆழ் மனதில், ஆழப் பதிந்துபோய் இருந்த, 'பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிய வேண்டும்' என்ற அந்த இலட்சிய வேட்கை மீண்டும் வெளிக் கொணரத் தொடங்கியபோது,தனது நீச்சல் பயிற்சியிலும் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார்.

விவசாய போதனாசிரியராகப் பணியாற்றிக் கொண்டு,நீச்சல் பயிற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில்,எதிரபாராது அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அந்தப் பேரிழப்பு அவரை நிலை குலையச் செய்து விட்டது. வுhழ்க்கைத் துணையாக மட்டுமன்றி, உற்றதொரு வழிகாட்டியாகவும்,வாழ்ந்து அவருடைய இன்பத்திலும் துன்பத்திலும் பற்றுக் கோடாக வாழ்ந்து வந்த அவரது அன்புக்கினிய மனைவியின் மரணம் மாறாத சோகத்தைக் கொடுத்தது.அவரது இழப்பின் துயரத்தின் மத்தியில் மூன்று புதல்வர்களுடனும் தனிமையில் வாழ்ந்து வந்த நவரத்தினசாமி எவ்வித பற்றுக்கோடுமற்று வாழ்ந்து வந்தார்.அவரது உடலும்,உள்ளமும் சோர்ந்து,தான் நேசித்து மகிழ்ந்து வாழ்ந்த மனைவியின் நினைவாலேயே வாடிக்கொண்டிருந்தார்.

'தந்தையொடு கல்வி போம்
தாயொடு அறுசுவை போம் - பொற்
றாலியோ டெவையும் போம்'

என்ற பாடல் அடிகளுக்கு ஏற்றாற் போல்.அவர் எதிலுமே ஈடுபாடற்ற நிலையில் வாழ்ந்து வந்தார்.அவரது பற்றறுந்த வாழ்வைச் சிலகாலம் வரை அவதனித்துக் கொண்டு வந்த அவரது அயலவர்களும்,உறவினர்களும்,நண்பர்களும் அவரது பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க வேண்டும் என்ற இலட்சியம் என்பவற்றையெல்லாம் நினைவூட்டி அவரைப் படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தனர்.

'பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க வேண்டும்' என்ற அவரது இலட்சிய வேட்கை மீண்டும் முனைப்புப் பெற்றது. 'பாக்கு நீரிணையை நீந்திக் கடத்தல்' என்ற தனது ஆத்மாவின் இராகங்களை மீண்டும் மீட்டிப்பார்க்கத் தொடங்கினார்.அவருக்குள் ஆழப் பதிந்திருந்த சோகம் மீண்டும் அவரது ஆழ் நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டது

ஓருவர் தனது இலட்சியத்தை அடையவேண்டுமென்பதில் எந்த அளவுக்குப் பற்றும் நம்பிக்கையும் கொண்டு செயற்படுகின்றாரோ அந்த அளவுக்கு அவர் தனது இலட்சியத்தை அடைந்த கொள்வதற்கான வாய்ப்புக்களையும் அதிகரித்துக் கொள்வார் என்பதற்கு ஒரு அடையாளமாக நவரத்தினசாமி அந்த வெற்றியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினார்.அதன் விளைவாக 1954 ஆம ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் அவரது 46 ஆவது அகவையில், சுமார் 31 மைல் நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்காக வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் இறங்கிய நவரத்தினசாமியை வழியனுப்பி வைப்பதற்காக அவரது மூன்று புதல்வர்களுடன் உறவினர்கள்,ஊரவர்கள்,நண்பர்கள் மற்றும பத்திரிகையாளர்கள், பிரமுகர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானவர்கள் குழுமியிருந்தனர்.

அன்று பிற்பகல் 2.00 மணிக்கு வல்வெட்டித்துறையில் திரண்டிருந்த மக்களிடம் இருந்தும் .பிள்ளைகளிடம் இருந்தும் விடைபெற்றுக் கொண்டு ஆழியில் இறங்கினார்.கடல் அன்னையின் மடியில் அவரது பாதங்கள் பட்டதும்இகடற்கரையில் தரண்டிருந்த மக்களின் கரகோசமும், ஆரவாரமும் சீறிப் பாய்ந்து ஒலி எழுப்பும் அலைஒலிகளை விடப் பேரொலியாக எழுந்து வானமெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.
ஆயிரம் ஆயிரமாகக் குழுமி நின்ற உறவுகளின் வாழ்த்தொலிகளுடன்,தனது உடல் முழுதும் 'கிறிஸ்' பூச்சினால் மூடி மறைத்து நீந்தத் தொடங்கிய நவரத்தினசாமியின் முன்னும் பன்னுமாக இயந்திர வள்ளங்கள் கடல் அலைகளைப் கிழித்தபடி சென்று கொண்டிருந்தன.நீச்சலைத் தொடங்கிய நேரத்தில் இருந்து உற்சாகம் கரை புரண்டு ஓடியதால்,நவரத்திகசாமியின் உடலிலும் உள்ளத்திலும் உவகை பொங்கிக் கொண்டிருந்தது.

'இன்னும் சில மைல் தூரத்திற்குள் நீந்திக் கடந்து விடுவேன்' என்ற ஆக்ரோசத்துடன் வேகமாக் கைகளையும், கால்களையும் அசைத்து மீன்களைவிட வேகமாக நீந்திக் கொண்டே இருந்தார்.
'அண்ணை.... கோடியாக் கரைக்கு இன்னும் ஏழு மைல் தான் இருக்குது..வீச்சாப்பிடிச்சியள் என்றால் ரெண்டு மணித்தியாலத்திற்குள்ளை போயிடலாம்.'
வள்ளத்தில் இருந்து வழித்துணையாக வந்தவர்களின் அந்த உற்சாகமான வார்த்தைகள் அவருக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுப்பது போல் இருந்தது.
ஆனால் அவரது அந்த உற்சாகமும்,ஆர்வமும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை.அவரது வாழ்க்கையின் பெரும் பகுதி சோகத்திலும் மன உளைச்சலிலுமே கழிந்ததாலோ என்னவோ அன்றும் அவருக்குச் சோதனைகள் காத்திருந்தன. இயற்கையின் சீற்றமும்,கடலின் கொந்களிப்பும் வரவர அதிகரித்துக் கொண்டே வந்தது. 'பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து விடவேண்டும் என்ற முனைப்போடு சோர்வே இல்லாது நீந்திக் கொண்டிருந்த நவரத்தினசாமியினால் இயற்கையின் சீற்றத்திற்கு ஈடு கொடுப்பதே பெரும் போராட்டமாக இருந்தது. 'சாண் ஏற முழம் சறுக்குவது போல்' சில மீற்றர் தூரம் முன்னோக்கி நீந்திக் கொண்டிருக்க பேரலைகள் வந்து அதைவிடக் கூடிய தூரத்திற்குப் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

அப்பொழுதும் கூட கடல் அலைகளுடன் எதிர்த்துச் சளைக்காது போராடிக் கொண்டிருந்த நவரத்தினசாமியை நோக்கி, வள்ளத்தில் இருந்தவர்கள்,
'அண்ணை ....காத்துக்கடல் வர வர வேகமா அடிக்குது....புயல் வரப் போகுது போல கிடக்கு....வள்ளத்திலை ஏறுங்கோ.அடுத்தமுறை பார்க்கலாம்.'
ஏன்று உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தனர்.ஆனால், அவரது இலடசியப் பயணத்தின வேகம் அவரைக் கட்டுப்படுத்தமுடியாதிருந்தது. மூச்சு இரைக்க,உடலும் உள்ளமும் சோர்வடையத் தொடங்கியது.அந்த நிலையிலும் தான் கொண்ட இலட்சியத்தை அடையவேண்டுமென்ற ஆவலில் நீந்திக் கொண்டே இருந்த நவரத்தினசாமியின் மலை போன்ற பென்னம் பெரிய அலையொன்று வந்து மோதியதும் ஒரு கணம் நிலை குலைந்து

போய் விட்டார். அவரைத் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த இயந்திர வள்ளங்கள்,மேலும்,கீழும் பலமாக ஆடத் தொடங்கிவிட்டன.ஒரு சில வள்ளங்கள் நீரோட்டத்தினால் அடித்துச் செல்லப்பட்டு வழிதவறிச் சென்று கொண்டிருந்தன. இந்த அசாதாரண காலநிலை தொடர்ந்து கொண்டே இருந்தால்,எல்லோருமே கடலுடன் சங்கமமாகிவிடுவோம் என்ற அச்சம் வள்ளத்தில் இருந்த ஒவ்வொருவர் மனதிலும் தோன்றியதும்,சோர்ந்து போன நிலையில் நீந்திக் கொண்டே இருந்த நவரத்தினசாமியை,வள்ளத்தில ஏறுமாறு வற்புறுத்திக் கொண்டே இருந்தனர்.

'இயற்கையுடன் எதிர்த்துப் போராட முடியாது' என்று முடிவெடுத்த நவரத்தினசாமி, தனது 23 மணி 30 நிமிட கடல் பயணத்தை மனமில்லாது முடித்துக் கொண்டு வள்ளத்தில் ஏறினார்.கடல் நீரோட்டம் காரணமாக கடலில் மிதந்து நீந்திய தூரம் சுமார் 35 மைல் தூரம் இருக்கும். வல்வெட்டித்துறையில் இருந்து 31 மைல்களுக்குள் கோடியாக் கரையை அடைந்திருக்க வேண்டிய நவரத்தினசாமி இயற்கை ஒத்துழைக்க மறுத்ததால், 35 மைல்கள் தூரம் வரை நீந்தியும் கூட கோடியாக்கரையை அடைய முடியாது போனது அவரை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியது.
தனது இலட்சியத்தை அடைய முடியாமலே போய் விடுமோ என்ற துயரம் அவரை வாட்டி எடுத்துக் கொண்டிருந்த நிலையிலும் அவருடைய உறுதி மட்டும் உரஆமறிப் போய் இருந்தது. தாம் கொண்ட இலட்சியத்தில் உறுதியாக இருப்பவர்கள் எந்த ஒரு பின்னடைவையும் கண்டு சோர்ந்து விடமாட்டார்கள்.
'பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தே தீருவேன்...அவ்வாறில்லாமல் நான் இறந்து போனாலும் என்னுடைய பிள்ளைகளில் ஒருவன் அதனைச் செய்து முடிப்பான்....'
ஏன்ற மனவைராக்கியத்துடன் அந்தப்பின்னடைலையும்.அடுத்து வரப்போகும் வெற்றிக்கான ஒரு அனுபவமாக எடுத்துக் கொண்டு கறை திரும்பிய நவரத்தினசாமி,இன்னும் தீவிரமாக நீச்சல் பயிற்சியில் கூடிய கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார்.
'பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவேண்டுமென்ற ஆவல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. மீண்டும் அந்த இலட்சியப் பயணத்தைத் தொடர்வதற்காக, 1954 ஆம ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பிறிபகல் 4.10 மணிக்கு, செல்வச் சந்நிதியானை வணங்கிக் கொண்டு, பாக்கு நீரிணையை முத்தமிட்டபடி கடலில் குதித்தார்.ஆன்றும் மிகப்பெரும் திரளான மக்கள் அவரை ஆசி கூறி வாழ்த்தி அனுப்பி வைப்பதற்காக வல்வெட்டித்துறைக் கடற்கரையில் கூடியிருந்தனர். ஒன்று பட்ட மக்களின் பலமும்,தன்னம்பிக்கையும் பெரும் பின்னடைவைச் சந்தித்து மீண்டும் எழுந்து வந்த நவரத்தினசாமிக்கு அபாரமான சக்தியைக் கொடுத்தது.இரண்டாவது முறை முயற்சியின் போது,அவரது உற்சாகமும், நம்பிக்கையும் பல மடங்காக அதிகரித்திருந்தது.

பிற்பகல் வேளையில் மங்கிய ஒளியில் அவரது கடற் பயணம் தொடங்கியது.நீச்சலை ஆரம்பித்த நேரத்தில் இருந்து சிறிதளவு நேரம்கூட ஓய்வெடுக்காது,தொடர்ந்தும் நீந்திக் கொண்டே இருந்தார்.முன்னைய பயணத்தைப் போன்று இல்லாது,இம்முறை இயற்கையின் சீற்றம் சிறிது தணிந்திருந்தது.ஆழக் கடலின் நடுவே 'கிறிஸ்' பூசிய உடலுடன் நீந்திக் கொண்டிருந்த நவரத்தினசாமியைச் சுற்றிவர இராட்சத மீன்களும்,பென்னம் பெரிய நீண்ட கடற் பாம்புகளும் சுற்றிச் சுற்றி வந்து அவரைத் தாக்கவதற்கு முயற்சித்த போதெல்லாம்,அவற்றை இலாவகமாக வெற்றி கொண்டு தன் பயணத்தை விடாது முன்னேறிக் கொண்டிருந்தார்.அந்தக் கடல் ஐந்துக்களுடனான கடும் சமரின் மத்தியல், சுமார் 10 அடி நீளமுள்ள கடற் பாம்பு ஒன்று அவருடைய கையை மிக இறுக்கமாகச் சுற்றிப் படித்தது.அதே வேளை தனது அகன்ற வாயைப் பிளந்தபடி கூரிய பற்களுடன் இராடசத மீன் ஒன்று அவரை விழுங்குவகற்காக அவரை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது.அந்தப் பயங்கரமான ஒரு சூழலிலும் கூடப் பதற்றமடையாது,அவற்றைத் தன் உடலின் வலுக் கொண்ட மட்டும் பலத்தைப் பிரயோகித்து,பாம்புகளைப் பிய்த்து எறிந்தும்,இராட்சத

மீன்களைத் தலையில் அடித்து மயங்கச் செய்தும்,தனது வீர யாத்திரையைத் தொடர்ந்தார்.

இலட்சியத்தில் கொண்ட உறுதியும்,தன்னம்பிக்கையும் கடல் வீரன் நவரத்தினசாமிக்கு மாபெரும் சாதனையை நிரலநாட்டிக் கொடுத்தது.அலை கடலின் ஆர்ப்பரித்த பேரலைகளையும், நஞ்சை உமிழும் கடல் வாழ் கொடிய விலங்குகளின் எதிர்ப்பலைகனையும் தாண்டி இரண்டு இரவுகளும்,ஒரு பகலுமாக ஊண் உறக்கமின்றி பாக்கு நீரிணையை நீந்திக்கடந்து வெள்ளிக் கிழமை இரவு 7 மணிக்கு தமிழகத்தின் கோடியாக் கரையை அடைந்து சாதனை படைத்த தமிழ் வீரன் நவரத்தினசாமியை வரவேற்பதற்காக தமிழகமே திரண்டிருந்தது.தமிழகத்தின் கோடியாக் கரையொரமெங்கும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.
'ஈழத்தமிழ் மறவனே வருக..' என்று உணர்ச்சி ததும்பக் கோசமிட்டபடி, அவரை வரவேற்பதற்காக மாலைகளுடனும்,புகைப்படக் கருவிகளுடனும் முண்டியடித்தபடி கரையோரமாக நின்றனர்.தமிழகத்திற்கும்,ஈழத்திற்கும் உள்ள தொப்புள் கொடி உறவை இலகுவில் அறுத்தெறிந்துவிட முடியுமா?

தமிழகத் தமிழர்களின் உணர்ச்சி ததும்பிய வரவேற்பைக் கண்ணீர்மல்கப் பெற்றுக் கொண்ட நவரத்தினசாமி,அவர்களிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு இயந்திரம் பூட்டிய வள்ளத்தில் பல வள்ளங்கள் சூழ வல்வெட்டித்தறை நோக்கிப் புறப்பட்டார். சில மைல் தூரம் வரை கோடியாக்கரை மக்களும் தமது படகுகளில் சென்று அவரை வழி அனுப்பி வைத்தனர்.
கனத்த நெஞ்சுடன் கோடியாக் கரையில் இருந்து வல்வெட்டித்துறை சுங்கக் கடற்கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிந்த நவரத்தினசாமியை அங்கும் வரவேற்பதற்காக சுமார் 25,000 க்கும் மேற்பட்ட மக்கள் உற்சாகமாகத் தமது கைகளை அசைத்தபடி,கோசமிட்டுக் கொண்டு நின்றனர்.அவர்களுள் பருத்தித்துறை, சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பதில் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சி.எஸ்.குமாரகுலசிங்கம், திரு.வி.நல்லையா, இலங்கை சமசமாஜக் கடசியின் பொதுச் செயலாளர் டாக்டர்.என்.எம். பெரேரா உள்ளிட்ட பல பிரமுகர்கள் அந்தச் சாதனை வீரனை வரவேற்பதற்காக வல்வெட்டித்துறையின் கடற்கரையில காத்திருந்தனர்.
ஆம்..... 'வெற்றி ஈட்டி விட்டான் தமிழன் - விருது நாட்டி விட்டான்......' என்ற சாதனையை நிலை நாட்டுவதற்காக, பல சோதனைகள்,வேதனைகளின் மத்தியிலும் 'பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தே தீருவேன்' என்ற அந்த இலட்சிய வேட்கையை நோக்கி அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்ட தமிழ் மறவன் நவரத்தினசாமியின் அந்தச் சாதனை தமிழர்களின் வரலாற்றில் தொண்டைமானாறு,வல்வெட்டித்தறைக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றியும்,கௌரவமுமாகும்.

உசாத்துணைகள்:

1. தினகரன் நாளிதழ்
2. நவரத்தினசாமி- நீச்சு வீரன் வாழ்க்கைச் சித்திரம் - காவலூர்.ஜி.எம்.செல்வராசா (மறு பதிப்பு-கனடா ஆவணக் காப்பகம்)
3. நேர் காணல்கள்

வல்வை.ந.அனந்தராஜ்
B.A.(Hons),M.A ,Dip-In-Edu.,Dip-In-Journalism,SLPS-1,SLEAS-3

நன்றி: http://www.vvtinfo.com